Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.384/2025

Dated 21-04-2026
Deposition of witness for : PW 14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வசந்த் | வயது | : | 28 |
| தந்தை பெயர் | : | சேகர் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | பாரதிதாசன் நகர்,1வது தெரு | தொழில் | : | டைல்ஸ் வேலை |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 produced through V.C. and other accused present**

**Ld. D. Counsels Present**

சாட்சியை தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலைய மு.நி.கா. **1348** பிரகாஸ்குமார் அடையாளம் காட்டினார்.

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். டைல்ஸ் வேலை செய்து வருகிறேன்.

2) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது.

இரண்டாவது கையெழுத்து பிரபாகரன் என்பவருடையது. அந்த பிரபாகரன் என் நண்பர்தான்.

3) கடந்த 9.9.2025 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் சம்பவ இடமான கலைஞர் நகர் , 1வது தெரு, ஆதிமூலம் பிளாட்டுக்கு முன்பு நின்றுகொண்டிருந்தோம். அப்போது போலீசார் வந்தார்கள். போலீசார் சசி இறந்து கிடந்த இடத்தை பார்த்து படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். பார்வை மகஜரை படித்து பார்த்து நான் கையெழுத்து போட்டேன். அந்த பார்வை மகஜர் இதுதான். அது **அ.சா.ஆ.3** ஆகும்.

4) பிறகு போலீசார் சசி இறந்த இடத்தில் இருந்து ரத்தம் தோய்ந்த மண், ரத்தம் தோயாத மண் சிறிதளவு ஆகியவற்றை கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுகை மகஜரில் நானும் பிரபாகரனும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுகை மகஜர் இதுதான். அது **அ.சா.ஆ.4** ஆகும். ரத்தம் தோய்ந்த மண் சிறிதளவு **அ.சா.பொ.3** , ரத்தம் தோயாத மண் சிறிதளவு **அ.சா.பொ.4** ஆகும்.

5) இது பற்றி என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் இளம் வழக்கறிஞர்கள் ஆஜர் ஆனார்கள். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராத காரணத்தினால் அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஏதும் இல்லை என முடிக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.21 14:59:30 +0530